வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்

தேதி 06.01.2026 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------

*தலைப்புச் செய்திகள்*

ஊட்டச்சத்துக் குறைபாட்டின் அடிப்படை காரணங்களை கண்டறிந்து போக்க வேண்டியதன் அவசியத்தை, மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ், தெலுங்கு உள்ளிட்ட 5 செம்மொழிகளின் 55 அரிய இலக்கியப் படைப்புகளை, மத்திய அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் இன்று புதுடெல்லியில் வெளியிட்டார்.

செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தினால், மனித வாழ்க்கையில், பெரிய மாற்றங்கள் ஏற்பட்டு வருவதாக, மத்திய இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா கூறியுள்ளார்.

கடந்த 1ஆம் தேதி, இலங்கை கடற்படையினரால் பிடித்துச் செல்லப்பட்ட, 11 இந்திய மீனவர்களை மீட்கக் கோரி, புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி, வெளியுறவு அமைச்சருக்கு, கடிதம் எழுதியுள்ளார்.

------------------------

*ஊட்டச்சத்து* 1 (9)

ஊட்டச்சத்து குறைபாட்டை போக்கி, நாட்டின் ஊட்டச்சத்து பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில், கார்ப்ரேட் சமூக பொறுப்புணர்வுத் திட்டத்தின் பங்கு என்பது குறித்த மாநாட்டை, இன்று புதுடெல்லியில், மத்திய தொழில் – வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தொடக்கி

வைத்தார். ஊட்டச்சத்துக் குறைபாட்டின் அடிப்படை காரணங்களை கண்டறிந்து போக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். குறிப்பாக, கருவுற்ற பெண்களிடையே, ஊட்டச்சத்து குறைபாட்டை போக்குவதால், நாட்டின் ஒட்டுமொத்த ஊட்டச்சத்து நிலவரத்தை மேம்படுத்த முடியும் என்று அவர் கூறினார். இதுகுறித்து கூடுதல் விவரங்கள்….

(வாய்ஸ்)

*ஊட்டச்சத்து* 2 (16)

(வாய்ஸ்)

ஊட்டச்சத்து நிலவரத்தை மேம்படுத்துவதில், அனைத்து அரசுத் துறைகளின் ஈடுபாடு அடங்கிய முழுமையான அணுகுமுறை ஒன்றை, பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தி வருவதாகவும், கார்ப்பரேட் நிறுவனங்கள் தங்களின் சமூக பொறுப்புணர்வு நிதி மூலம், இதில் முக்கிய பங்களிக்க முடியும் என்றும் மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல், ஊட்டச்சத்து மாநாட்டில் கூறினார். ஐடிபிஐ வங்கியின் சிசு சஞ்சீவினி சிஎஸ்ஆர் திட்டத்தை, நிகழ்ச்சியின்போது அவர் தொடக்கி வைத்தார். இத்திட்டத்தின் கீழ், மஹாராஷ்ட்ர மாநிலம் நாக்பூர் மாவட்டத்தின் ஊரகப் பகுதிகளைச் சேர்ந்த அங்கன்வாடி குழந்தைகளுக்கு, தேசிய பால்வள மேம்பாட்டு வாரியத்தால் தயாரிக்கப்படும் சத்துமாவு உருண்டைகள் வழங்கப்பட உள்ளன.

பிலாய் எஃகு ஆலையின் சிஎஸ்ஆர் திட்டத்தின் கீழ் அமலாகும் பால் பரிசுத் திட்டத்தின் 3ஆம் கட்டப் பணிகளும், இம்மாநாட்டின் போது

தொடக்கி வைக்கப்பட்டன. சத்தீஸ்கர் மாநிலத்தின் பிலாய் சுரங்கப் பகுதியில் அமைந்துள்ள பல்வேறு அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 4 ஆயிரம் குழந்தைகளுக்கு, விட்டமின் சேர்த்த வாசனைப் பால், இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது.

------------------------

*செம்மொழி* (11)

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஒடியா ஆகிய 5 செம்மொழிகளின் 55 அரிய இலக்கியப் படைப்புகளை, மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் இன்று புதுடெல்லியில் வெளியிட்டார். இந்திய மொழிகளுக்கான மத்திய கழகம் இந்நூல்களை பதிப்பித்துள்ளது. இந்தியாவில் மொழிகள்தான் மக்களிடையே தொடர்பை அதிகரித்து, சமூகத்தில் ஒற்றுமை ஏற்படுத்துவதாக, அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான், பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். எல்லா இந்திய மொழிகளும், தேசிய மொழிகள்தான் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தி வருவதாகவும், இதன் அடிப்படையிலேயே, மராத்தி, பெங்காலி, பாலி, பிராகிருதம் உள்ளிட்ட மேலும் 5 இந்திய மொழிகளுக்கு, கடந்த ஆண்டில், செம்மொழி அந்தஸ்து வழங்கப் பட்டதாகவும், அவர் கூறினார்.

------------------------

*செயற்கை நுண்ணறிவு* (20)

செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தினால், மனித வாழ்க்கையில், பெரிய மாற்றங்கள் ஏற்பட்டு வருவதாக, மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா

கூறியுள்ளார். செயற்கை நுண்ணறிவின் தாக்கங்கள் குறித்து, இன்று ஜெய்ப்பூரில் நடைபெற்ற பிராந்திய மாநாட்டில் உரையாற்றிய அவர், தற்போது அனைத்து துறைகளிலும் செயற்கை நுண்ணறிவு பரவலாக பயன்படுத்தப்பட்டு, திறன் மேம்பாட்டிற்கு உதவுவதாக கூறினார். சுகாதாரம், வேளாண்மை, கல்வி உள்ளிட்ட துறைகளில், விரிவான மாற்றம் கொண்டு வரும் நோக்கிலான, இண்டியா ஏஐ இயக்கத்திற்கு, மத்திய அரசு 10 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்து இருப்பதாகவும், அவர் தெரிவித்தார். ராஜஸ்தான் முதலமைச்சர் திரு. பஜன்லால் ஷர்மா உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான இயந்திர கற்றல் குறித்த ராஜஸ்தான் மாநில அரசின் புதிய கொள்கையும், இம்மாநாட்டில் வெளியிடப்பட்டது. பொது சேவை முறைகளில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு, செயற்கை நுண்ணறிவை பொறுப்புடன் பயன்படுத்துதல், எதிர்கால வேலை வாய்ப்புகள், மற்றும், திறன் மேம்பாடு குறித்து, துறை வாரியான அமர்வுகள் இடம்பெற்றன. நிர்வாக சீர்திருத்தம், பொருளாதா மேம்பாடு, புதுமையாக்கம், மற்றும், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்குடன், இந்த பிராந்திய மாநாட்டிற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

------------------------

*ஆதித்யநாத்* (15)

நாட்டின் கிராமப்புற வளர்ச்சியில் முக்கிய மைல்கல்லாகவும், முன்னேறிய இந்தியாவிற்கான அடித் தளமாகவும், மத்திய அரசின் விக்சித் பாரத்-ஜி ராம் ஜி சட்டம் அமையும் என்று, உத்தரபிரதேச முதலமைச்சர்

யோகி ஆதித்யநாத் தெரிவித்துள்ளார். கிராமப்புறங்களில், வெளிப்படையான நடைமுறைகளை உறுதிப்படுத்தி, வேலை வாய்ப்புகளை அதிகரிக்கவும், நிரந்தர சொத்துகளை உருவாக்கி, உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், இத்திட்டம் உதவிகரமாக இருக்கும் என்று, அவர் இன்று லக்னோவில், செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். முந்தைய மகாத்மாகாந்தி ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் நிலவிய குறைபாடுகள், மற்றும், ஊழல்களை களைய, புதிய திட்டம் அவசியமானது என்று அவர் தெரிவித்தார். புதிய வேலை உத்தரவாதத் திட்டத்தின் கீழ், பயனாளிகளுக்கு வேலை வழங்கப்படும் நாட்களின் எண்ணிக்கை, 100ல் இருந்து 125ஆக உயர்த்தப் பட்டுள்ளதாகவும், வேலைக்கான ஊதியம், வராந்திர அடிப்படையில் வழங்கப்படும் என்றும், யோகி ஆதித்யநாத் கூறினார்.

-------------------------

*புதுச்சேரி சந்திப்பு* (3)

புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதனை, லோக் நிவாசில் சந்தித்து, புத்தாண்டு வாழ்த்து தெரிவித்துக் கொண்டார்.

-------------------------

*ரங்கசாமி கடிதம்* (10)

கடந்த 1ஆம் தேதி,இலங்கை கடற்படையினரால் பிடித்துச் செல்லப்பட்ட, 11 இந்திய மீனவர்களை மீட்க, வெளியுறவு அமைச்சரின் தலையீட்டை நாடி, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார். வெளியுறவு அமைச்சர்

முன்னுரிமை அடிப்படையில், இலங்கை அதிகாரிகளை தொடர்பு கொண்டு, மீனவர்களை,படகுடன் சேர்த்து மீட்க வேண்டும் என, முதலமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார். கோடியக்கரை அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த போது, இலங்கை கடற்படையினரால் பிடித்துச் செல்லப்பட்ட 11 இந்திய மீனவர்களில், 10 பேர் புதுச்சேரியின் காரைக்கால் பகுதியை சேர்ந்தவர்கள், எஞ்சிய ஒருவர் தமிழக மீனவர் ஆவார்.

------------------------

புதுச்சேரி போட்டி (14)

மத்திய அரசு வழிகாட்டுதலின்படி, புதுச்சேரி அரசின் இளைஞர் நலன், மற்றும், விளையாட்டுத் துறை அமைச்சகத்தால், மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் இளைஞர்களுக்கான நடத்தப்பட்ட, பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, வினாடி-வினா உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள், புதுடெல்லி பாரத் மண்டபத்தில், வரும் 10ஆம் தேதி தொடங்க உள்ள, தேசிய இளையோர் விழாவில் பங்கேற்க உள்ளனர். இவர்களை தலைநகருக்கு வழியனுப்பும் விழா, புதுச்சேரி லோக்நிவாசில் இன்று நடைபெற்றது. துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி ஆகியோர் இதில் கலந்து கொண்டு, டெல்லி செல்லும் இளைஞர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கி, வழியனுப்பி வைத்தனர். மாநில இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம் வாழ்த்துரை வழங்கினார். துறைச் செயலர் திரு. கிருஷ்ணமோகன், துறை இயக்குநர் திரு. சுதாகர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

-------------------------

*பிரகதி-அமிர்த சரோவர் 1 (10)*

முக்கிய உள்கட்டமைப்பு திட்டங்களின் அமலாக்கத்தில், மத்திய-மாநில அரசுகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு மூலம் குறைகளை உடனுக்குடன் களைந்து, திட்டங்கள் குறித்த நேரத்தில் நிறைவேற்றி முடிக்கப்படுவதை உறுதிப்படுத்த, பிரதமர் திரு நரேந்திர மோடியின் எண்ணத்தில் உருவாகி வடிவமைக்கப்பட்ட, பிரகதி தொழில் நுட்ப வசதி, இதுவரை, 50 கூட்டங்களை வெற்றிகரமாக நடத்தி, புதிய மைல்கல் ஒன்றை எட்டி உள்ளது. பிரதமரின் நேரடி மேற்பார்வையின் கீழ் செயல்படும் பிரகதி வசதி மூலம் கண்காணித்து நிர்வகிக்கப்படும் பல்வேறு திட்டங்களில் ஒன்றான அமிர்த சரோவர் திட்டம் குறித்து, இன்று இந்த சிறப்புத் தொகுப்பில் விவரங்கள் இடம்பெறுகின்றன…..

(வாய்ஸ்)

*பிரகதி-அமிர்த சரோவர் 2 (14)*

(வாய்ஸ்)

<u>மத்திய அரசால் 2022ஆம் ஆண்டு தொடக்கப்பட்ட அமிர்த சரோவர் திட்டம், நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும், தலா 75 நீர் நிலைகளை புனரமைத்து மேம்படுத்தும் நோக்கத்துடன் செயல்படுத்தப் படுகிறது. குறைந்தபட்சம் 1 ஏக்கர் பரப்பளவும், 10 ஆயிரம் கனஅடி கொள்ளவும் கொண்ட நீர் நிலைகள் மேம்படுத்தப் படுவதால், நீர்வளத்தை சேமிக்கவும், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தவும், பயனுள்ளதாக இத்திட்டம் அமைந்துள்ளது. திட்டத்துடன் தொடர்புடைய பல்வேறு மத்திய அமைச்சகங்கள், மாநில அரசுகள், மற்றும், மாவட்ட நிர்வாகத்தினர், பிரகதி</u>

டிஜிட்டல் வசதி மூலம் ஒருங்கிணைக்கப்பட்டு, திட்டத்திற்கான நிலம், நிதி, மற்றும் இதர அம்சங்கள் குறித்து, முக்கிய முடிவுகள் விரைந்து மேற்கொள்ளப் படுகின்றன. 2023ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் தேதிக்குள், இத்திட்டத்தின் கீழ், 50 ஆயிரம் அமிர்த குளங்களை உருவாக்க வேண்டும் என, ஆரம்பத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு முன்கூட்டியே எட்டப்பட்டு, தற்போது இந்த எண்ணிக்கை, 68 ஆயிரத்து 800-ஐ தாண்டி இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

------------------------

திருப்பரங்குன்றம் 1 (14)

திருப்பரங்குன்றம் மலை உச்சியில், தீபத் தூணில் தீபம் ஏற்ற அனுமதி அளித்து, தனி நீதிபதி ஒருவரால் அண்மையில் வழங்கப்பட்ட தீர்ப்பு செல்லுபடியாகும் என, சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளை இன்று உத்தரவிட்டுள்ளது. தீபத்தூண் அமைந்துள்ள இடம், திருப்பரங்குன்றம் முருகன் கோவிலுக்கு சொந்தமானதே என்று, நீதிபதிகள் திரு. ஜெயசந்திரன், திரு. ராமகிருஷ்ணன் ஆகியோர் அடங்கிய அமர்வு, இன்று தனது உத்தரவில் கூறியது. தீபத் தூணில் தீபம் ஏற்ற, எத்தனை பேரை அனுமதிக்கலாம் என்பதை, இந்திய தொல்லியில் ஆய்வுத் துறையின் ஆலோசனை அடிப்படையில் தீர்மானிக்கலாம் என்றும் நீதிபதிகள் கூறினர்.

நீதிமன்றத்தின் இன்றைய உத்தரவு, தமிழகத்தைச் சேர்ந்த இந்துக்கள், மற்றும், முருக பக்தர்களுக்கு கிடைத்த வெற்றி என்று, மனுதாரரில் ஒருவரான ராஜேஷ், செய்தியாளர்களிடம் கூறினார்.

நீதிமன்ற உத்தரவின்பேரில், தீபத்தூணில் தீபம் ஏற்றத் தேவையான ஏற்பாடுகளை, கோவில் நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

*திருப்பரங்குன்றம் 2 (6)*

நீதிமன்றத் தீர்ப்பை, பாரதீய ஜனதா கட்சி வரவேற்றுள்ளது. மூத்த பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. பியூஷ் கோயல், புதுடெல்லியில் இன்று இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசுகையில், தனி நீதிபதியின் உத்தரவை ஆட்சேபித்து, தமிழக அரசு மேல் முறையீடு செய்தது, துரதிஷ்டவசமானது என்றும், நீதிமன்றத்தின் இன்றைய உத்தரவு, முருக பக்தர்களுக்கு நீதி வழங்கி இருப்பதாகவும் கூறினார்.

------------------------

*வானிலை (15)*

இன்று, நிலநடுக் கோட்டு இந்தியப் பெருங்கடல், மற்றும் தெற்கு வங்கக் கடலின் மத்திய பகுதிகளில் நிலவும், ஆழந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி, அடுத்த 24 மணி நேரத்தில், காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, அதற்கு அடுத்த 48 மணி நேரத்தில், தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகளுக்கு நகரக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றும், நாளையும், தமிழகத்தில் ஓரிரு இடங்கள், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், லேசானது முதல், மிதமான மழை பெய்யக் கூடும் என்றும், வரும் 12ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும், தெரிவிக்கப் பட்டுள்ளது. உள்தமிழகத்தில்ஓரிரு இடங்களில், அதிகாலை வேளையில், லேசான பனிமூட்டம் காணப்படும் என்றும், வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதற்கிடையே கடந்த 24 மணி

நேரத்தில், அதிகபட்சமாக ஈரோட்டில், 33.2 செல்சியஸ் வெப்பநிலை பதிவாகி உள்ளது. சமவெளிப் பகுதிகளை பொருத்தவரை, திருத்தனியில், 18.5 டிசிரி செல்சியஸ், மற்றும், மலைப் பகுதிகளை பொருத்தவரை, வால்பாறையில், 8.5 டிகிரி செல்சியஸ், குறைந்தபட்ச வெப்பநிலை பதிவாகி உள்ளது.

-------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

ஊட்டச்சத்துக் குறைபாட்டின் அடிப்படை காரணங்களை கண்டறிந்து போக்க வேண்டியதன் அவசியத்தை, மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ், தெலுங்கு உள்ளிட்ட 5 செம்மொழிகளின் 55 அரிய இலக்கியப் படைப்புகளை, மத்திய அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் இன்று புதுடெல்லியில் வெளியிட்டார்.

செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தினால், மனித வாழ்க்கையில், பெரிய மாற்றங்கள் ஏற்பட்டு வருவதாக, மத்திய இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா கூறியுள்ளார்.

கடந்த 1ஆம் தேதி, இலங்கை கடற்படையினரால் பிடித்துச் செல்லப்பட்ட, 11 இந்திய மீனவர்களை மீட்கக் கோரி, புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி, வெளியுறவு அமைச்சருக்கு, கடிதம் எழுதியுள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது